செய்தி வெளியீடு எண் : 2011 நாள் : 05.10.2023

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒடிசாவில் நடைபெற்ற ஹீரோ ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப் மகளிர் பிரிவு கால்பந்து போட்டிகளில் பதக்கம் வென்ற தமிழ்நாடு அணிக்கு ரூ.22 இலட்சம் உயரிய ஊக்கத்தொகையினை வழங்கினார். கத்தார் நாட்டில் நடைபெறவுள்ள டி–20 காது கேளாதவர்களுக்கான உலகக் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளும் 2 வீரர்களுக்கு தலா ரூ. 75,000/–க்கான காசோலைகள் மற்றும் கோயம்புத்தூரில் நடைபெறவுள்ள தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டிக்காக ரூ.5 இலட்சத்திற்கான காசோலை ஆகியவற்றை "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" சார்பில் வழங்கினார்.**

ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் 20.09.2023 முதல் 30.09.2023 வரை 16 மாநிலங்கள் பங்கேற்ற ஹீரோ ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப் 17–வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவு கால்பந்து போட்டிகள் நடைபெற்றது. இந்தப் போட்டியின் (TIER –1) இறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு மற்றும் மணிப்பூர் மாநில அணிகள் விளையாடின. இதில் 1 : 0 என்ற கோல் கணக்கில் மணிப்பூர் அணி முதலிடம் பெற்றது. தமிழ்நாடு அணி சிறப்பாக விளையாடி இரண்டாவது இடத்தை பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றது.

இந்தப் போட்டியில் பங்கேற்ற தமிழ்நாடு அணியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதி நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த 5 வீராங்கனைகள், ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்த 2 வீராங்கனைகள் இடம் பெற்றிருந்தனர். மேலும், வீராங்கனைகளுக்கு பயிற்சி அளித்த பயிற்றுநர் அபர்ணா, மேலாளர் அஷ்வினி ஆகியோரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாடு பெண்கள் அணியைச் சார்ந்த 22 வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் தலா ரூபாய் 1 இலட்சம் வீதம் ரூ.22 இலட்சம் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை இன்று (05.10.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

**"தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை "**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஒடிசா மாநிலத்தில் கடந்த 2023 செப்டம்பர் 25ஆம் தேதி முதல் அக்டோபர் 1ஆம் தேதி வரை நடைபெற்ற டி – 20

காது கேளாதவர்களுக்கான தேசிய கிரிக்கெட் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொண்ட தமிழ்நாடு ஆண்கள் அணியைச் சார்ந்த 13 வீரர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இவர்களுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்கள்.

மேலும், கத்தார் நாட்டில் 2023 டிசம்பர் 1ஆம் தேதி முதல் டிசம்பர் 12ஆம் தேதி வரை நடைபெறவுள்ள டி-20 காது கேளாதவர்களுக்கான உலகக் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ள உள்ள திரு. இ. சுதர்சன் மற்றும் திரு. சாய் அகாஷ் அவர்களின் ஏழ்மைநிலை கருதி "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" சார்பில் தலா ரூ. 75,000/- க்கான காசோலையினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, கோயம்புத்தூரில் 20.10.2023 முதல் 22.10.2023 வரை நடைபெறவுள்ள தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டிக்காக "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் போட்டி நடத்தும் அமைப்பாளர்களிடம் வழங்கி, போட்டிக்கான கோப்பை, இலச்சினை மற்றும் டீ-ஷர்ட்களை அறிமுகப்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆப., அரசு உயர் அலுவலர்கள் மற்றும் விளையாட்டு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

*************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in